1981 ஏப்ரல் 10]

(தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்).

திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் அவ்வாறே அதே காரணத்திற்காக வெளிநடப்பில் கலந்து கொள்கிறோம்.

(ஜனதா கட்சியினர் வெளிநடப்பு செய்தனர்)

பிரிவுகள் 2 முதல் 10 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 14-4-1981 செவ்வாய் கிழமை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2,02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவை முன்வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ, சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

252. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்கு முறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் (திரைப்படங்கள்) 26–10–1979 ஆம் தேதியிடப் பெற்ற 2679 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

124. தமிழ்நாடு 1981–ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1981).